1992 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 668, திரு. இரா. நடேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

668

## ரப்பர் தரம் பிரிப்பு ஆராய்ச்சிக்கூடம்

*8002—திரு. இரா. நடேசன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் ரப்பரின் தரத்தை பகுப்பாய்வு செய்து, தரத்தை பேணுவதற்கு ஏதுவாக ஒரு ரப்பர் தரம் பிரிப்பு ஆராய்ச்சிக் கூடம் நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறு ரப்பர் உற்பத்தியாளர்களின் நலன் கருதி ரப்பர் தரத்தை பகுப்பாய்வு செய்து தருவதற்காக நாகர் கோவில் பதிவு அலுவலக வளாகத்தில் ஒரு சிறு தரம் பிரிப்பு ஆய்வகம் அமைக்க அரசு ரப்பர் கழகம் திட்டமிட்டுள்ளது.

(ஆ) ஆய்வகம் அமைக்க இயக்குநர்கள் குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. ஆனால் அரசு ரப்பர் கழகத்தின் நிதி நிலை மோசமாக உள்ளதால் செயல்படுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. கழக நிதிநிலை சீரமைந்ததும் ஆய்வுக் கூடம் நிர்மாணிக்கப்படும்.

திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வுக் கூடம் அமைக்க திட்டமிட்டுள்ளதாகக் கூறியதற்கு நன்றி. வருகின்ற ஆண்டிலே எப்படியாவது அதைச் செயல்படுத்த முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஆகின்ற செலவு ரூ. 3.10 இலட்சம். இந்த நிதியாண்டில் அதை உருவாக்க வேண்டுமென்பதற்காக 92-93-ஆவது நிதியாண்டில் அந்த ஆய்வுக் கூடத்தை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 669, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.